26th August 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: சபாநாயகர் அவர்களே, மத்திய அரசு இத்தகைய காரியங்களைக் கூட்டுறவுகள் மேற்கொள்வதற்கு அனுகூலமாக, கார்ப்பரேஷன் முதலிய அமைப்புகளைக் கொண்டு அதற்கு ஆதரவளித்து முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போது, மாநில அளவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு குழு இருப்பதால், என்ன கஷ்டம்? அது தேவையில்லை என்று அரசாங்கம் கருதக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நான் கூறியது, தற்போதைக்குத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது என்பதுதான். அரிசி ஆலைகள், அல்லது வேறு தொழிற்சாலைகள், அவைகளுக்காகத் தனிக் குழு தேவையா என்று அரசு ஆராய வேண்டியிருக்கிறது. ஆலைப் பணிகளுக்கும், விற்பனை வேலைக்கும் பல வேற்றுமைகள் இருப்பதால் ஒரே குழுவினால் எல்லாவற்றையும் கவனிக்க முடியுமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவு ஆலையில் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலமாக விற்பனை செய்யவேண்டியது அவசியமாக இருப்பதால், இரண்டையும் ஒன்றாகக் கருதி அந்தக் குழு செயல்படுவதால் என்ன கஷ்டம் இருக்குமென்று அரசு கருதுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஆலைக்கும் விற்பனை நிலையங்களுக்கும் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இரண்டும் செய்ய வேண்டிய பணிகள் தனித்தனியாக இருக்கின்றன. ஆகையால் இரண்டிற்கும் தனித்தனியாக குழு இருப்பது நல்லது அல்லவா? ஒரே குழுவைக்கொண்டு இரண்டு வேலைகளையும் செய்யச் சொன்னால், இரண்டும் நன்றாகச் செயல்படாமல் போகாதா என்று ஆராய வேண்டியது அவசியமாகிறது.

Co-operative Land Development Banks

* 30 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Co-operative Land Development Banks registered in Tamil Nadu during 1969-70;

(*b*) the share capital collected by each of the banks; and

(*c*) the amount of share capital given by the Government to each of the banks?

கூட்டுறவு நிலவள வங்கிகள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1969-70-ஆம் ஆண்டில் பதிவான கூட்டுறவு நிலவள வங்கிகள் எத்தனை?

(இ) அந்த வங்கிகள் ஒவ்வொன்றும் சேர்ந்த பங்கு மூலதனம் எவ்வளவு?

(உ) அவை ஒவ்வொன்றுக்கும் அரசு அளித்த பங்கு மூலதனம் எவ்வளவு?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1969-70-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 67 நிலவள வங்கிகள் பதிவாகியுள்ளன?

(இ) & (உ) : இம் மன்றத்தின் முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சபாநாயகர் அவர்களே, இம் மன்றத்தின்முன் . . . .

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, இங்கே சபாநாயகர் அவர்களே என்று சொல்கிறார்கள். தலைவர் அவர்களே, சேர்மன் அவர்களே என்று சொல்வதுண்டு. சபாநாயகர் என்று சொல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : சேர்மனையும் சபாநாயகர் என்று சொல்வதில் குற்றமில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள கணக்குப்படி, 67 வங்கிகளில் பல வங்கிகளில் அரசாங்கம் ரூ. 25 ஆயிரம் பங்கு மூலதனத்திற்குச் சமமாகத் தொகை அளிக்க முன் வந்தும்கூட, பதிவு செய்து 9 மாதங்களாகியும் கூட, இன்னும் 5,000, 6,000 அளவில்கூட பங்குத் தொகை வசூலாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்தப் பகுதியில் நிலவள வங்கி செயல்பட போதுமான ஆதரவு இல்லாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட புள்ளிவிவரம் 31--3--1970 வரையில்தான் அதற்குப் பிறகு பல மாதங்கள் ஆகியிருக்கின்றன. உறுப்பினர்கள் சேகரிக்கும் பங்குத் தொகைக்கு மேற்படாதவாறு, ரூ. 25 ஆயிரம் வரையில், தமிழக அரசு பங்கு மூலதனம் வழங்கியுள்ளது. இப்போது ரூ. 25 ஆயிரம் வரையில் பங்கு மூலதனம் சேகரிக்காத நிலவள வங்கிகள் திருவாலங்காடு, வாலாஜாபாத், கும்மிடிபூண்டி, ஸ்ரீபெரும்புதூர், கோத்தகிரி; 67 வங்கிகளில், மற்ற எல்லா நிலவள வங்கிகளிலும் உறுப்பினர்கள் ரூ. 25,000 மட்டுமல்லாமல் ரூ. 35 ஆயிரம், 40, 45 ஆயிரம் என்றுகூட பங்குத்தொகை சேகரித்திருக்கிறார்கள். இருந்தாலும் அரசு ரூ. 25,000 தான் கொடுத்திருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—CALLING ATTENTION TO HEALTH HAZARD AND OBSTRUCTION TO THE PUBLIC CAUSED BY STREET VENDORS IN ULL STREET IN VIRUDHUNAGAR.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the grave health hazard and obstruction to the public caused by the Government Order staying

[a] Printed as Appendix on pages 126–127